3.11.2022 • Thursday 13

தினகரன்

விழுப்புரம் - கள்ளக்குறிச்சி

இந்த நாள்

- சுபகிருது வருடம் ஐப்பசி மாதம் 17-ம் நாள். வியாழக்கிழமை. வளர்பிறை.
- திதி : தசமி இரவு 7.30 மணி வரை; அதன் பிறகு ஏகாதசி.
- நட்சத்திரம் : சதயம் இரவு 12.48 மணி வரை; அதன் பிறகு பூரட்டாதி.
- யோகம் : மரண யோகம்.
- நல்ல நேரம் : காலை 10.30 - 11.00 மணி வரை.
- ராகு காலம் : மதியம் 1.30 - 3.00 மணி வரை.
- எமகண்டம் : காலை 6.00 - 7.30 மணி வரை.
- சந்திராஷ்டமம் : ஆயில்யம்.
- சூலம் : தெற்கு; பரிகாரம் : தைலம்.

வானிலை

இன்று		நாளை	
அதிகபட்சம்	குறைந்தபட்சம்	அதிகபட்சம்	குறைந்தபட்சம்
28.0C/82.4F	22.0C/82.4F	28.0C/82.4F	23.0C/73.4F

இன்று மழை பெய்யும்.

பயிர்களை பாதுகாக்க முன்னெச்சரிக்கை நடவடிக்கை பக்கம் 14

ஆட்டோவில் சென்று வழிப்பறி, கொலை வெறித் தாக்குதல் பக்கம் 15

வடகிழக்கு பருவ மழை தீவிரம்

விழுப்புரம் மாவட்டத்தில் 2வது நாளாக கொட்டித் தீர்த்த கனமழை

■ ஆற்றில் வெள்ளப்பெருக்கு அதிகரிப்பு

விழுப்புரம், நவ.3: விழுப்புரம் மாவட்டத்தில் வடகிழக்கு பருவமழை தீவிரமடைந்துள்ளது. 2வதுநாளாக நேற்று மழை கொட்டித் தீர்த்தது. இதனால் ஆற்றில் வெள்ளப் பெருக்கும் அதிகரித்துள்ளது. இதனிடையே, நேற்று தொடர்மழையின் காரணமாக பள்ளிகளுக்கு விடுமுறை அளிக்கப்பட்டது.

தமிழகத்தில் கடந்த 29ம் தேதி வடகிழக்கு பருவமழை தொடங்கியது. விழுப்புரம் மாவட்டத்தை பொலுத்தவரை கடந்த 1ம் தேதி முதல் வடகிழக்கு பருவமழை பெய்து வருகிறது. வரும் 6ம் தேதிவரை இந்த மழை நீடிக்கும் என்று வானிலை மையம் தெரிவித்துள்ளது. விழுப்புரம் மாவட்டத்தில் வடகிழக்கு பருவமழையை யொட்டி தயார் நிலையில் மாவட்ட நிர்வாகம் முன்னெச்சரிக்கை பணிகளை முடுக்கி விட்டுள்ளது. இதனிடையே, தொடர்ந்து பெய்துவரும் மழையால் பொதுமக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது. நேற்று முன்தினம் பிற்பகல் வரை இடைவிடாமல் மழை பெய்தது. மரக்காணம் உள்ளிட்ட பகுதிகளில் அதிகளவிலான மழைபொழிவு இருந்தது.

புதிய பேருந்து நிலையம், கீழ் பெரும்பாக்கம் தரைப்பாலம் உள்ளிட்ட இடங்களில் தண்ணீர் தேங்கியதால் பொதுமக்கள் பாதிக்கப்பட்டனர்.

விழுப்புரம் நகரில் மிதமான மழைபொழிவு இருந்தநிலையில் இரவுமுதல் பரவலாகமழை பெய்தது. தொடர் மழையின் காரணமாக நேற்றையதினம் பள்ளிகளுக்கு விடுமுறைஅளித்து ஆட்சியர் மோகன் உத்தரவிட்டிருந்தார். காலையில் சாரல் மழை பெய்த நிலையில் 10 மணிக்கு மேல் மிதமான மழைஇடைவிடாமல் கொட்டித் தீர்த்தது. இதனால், விழுப்புரம் நகரில் தாழ்வான இடங்களில் தண்ணீர்தேங்கியது. இதனால் இருசக்கர வாகன ஓட்டிகள், பொதுமக்கள் பாதிக்கப்பட்டனர்.

மேலும் தொடர்ந்து பெய்துவரும் மழையில் ஏரி, குளங்கள் உள்ளிட்ட நீர்நிலைகளும் வேகமாக நிரம்பத்தொடங்கியுள்ளது. ஏற்கனவே, தென்பெண்ணையாறு, அதன் கிளை ஆறுகளில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளநிலையில் தற்போது பெய்துவரும் மழையால் ஆற்றில் நீரின் அளவு அதிகரித்துள்ளது. இதனால், 5க்கும் மேற்பட்ட இடங்களில் தரைப்பாலங்கள் வெள்ளத்தில் மூழ்கும் நிலை உள்ளது. மாவட்ட நிர்வாகத்தினர் ஆற்றங்கரையோரம் உள்ள பகுதிகளில் கூடுதல் கவனம் செலுத்தி ஆய்வு செய்துவருகின்றனர். தொடர்ந்து பெய்துவரும் மழையால் விவசாயிகள், பொதுமக்கள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

மழை அளவு விவரம்

விழுப்புரம் மாவட்டத்தில் நேற்று காலை வரை பெய்த மழைஅளவு.

1	விழுப்புரம்	8.90 மி.மீ
2	கெடார்	28.0 மி.மீ
3	விக்கிரவாண்டி	9 மி.மீ
4	வானூர்	16 மி.மீ
5	மரக்காணம்	42 மி.மீ
6	திண்டிவனம்	38 மி.மீ
7	செஞ்சி	22 மி.மீ
8	வல்லம்	27 மி.மீ
9	முகையூர்	33 மி.மீ
10	வளத்தி	43 மி.மீ
11	திருவெண்ணெய் நல்லூர்	11 மி.மீ

மாவட்டம் முழுவதும் 417 மி.மீ மழையும், சராசரியாக 19.86 மி.மீ பதிவாகியுள்ளது. அதிகபட்சம் வளத்தியில் 43 மி.மீ மழை பெய்துள்ளது.

வட்டாட்சியர் அலுவலகத்தில் ஆட்சியர் திடீர் ஆய்வு

உளுந்தூர்பேட்டை, நவ.3: உளுந்தூர்பேட்டை வட்டாட்சியர் அலுவலகத்தில் மாவட்ட ஆட்சியர் ஷ்ரவன்குமார் நேற்று ஆய்வு மேற்கொண்டார். அப்போது வருவாய்துறையின் கீழ் பொதுமக்களுக்கு வழங்கப்படும் அனைத்து விதமான சான்றுகளின் தற்போதைய நிலை மற்றும் நிலம் அளவீடு செய்யமனு கொடுத்தவர்களுக்கு விரைந்துநில அளவீடு பணிகளை முடிக்க வேண்டும் என கூறினார். இந்த ஆய்வின் போது மாவட்ட வருவாய் அலுவலர் விஜய்பாபு, வருவாய் கோட்டாட்சியர் யோகஜோதி, தாசில்தார் மணிமேகலை மண்டல துணை வட்டாட்சியர்கள் தவமணி, பாண்டியன், விஜயா, சார் அளவையர் தேவராஜ் உள்ளிட்டவர்கள் உடன் இருந்தனர். இதனை தொடர்ந்து உளுந்தூர்பேட்டை நகரப்பகுதியில் நகராட்சி அலுவலகம் கட்டுவதற்கான இடம், பேருந்து நிலையம் மற்றும் பேருந்து நிழற்குடை அமைய உள்ள இடங்களை பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

▶ உளுந்தூர்பேட்டை வட்டாட்சியர் அலுவலகத்தில் ஆட்சியர் ஷ்ரவன்குமார் ஆய்வு செய்தார்.

உளுந்தூர்பேட்டை அருகே

வாலிபரை கத்தியால் வெட்டிய 5 பேர் மீது வழக்கு

உளுந்தூர்பேட்டை, நவ.3: உளுந்தூர்பேட்டை அருகே உள்ள களத்தூர் கிராமத்தை சேர்ந்தவர் நாகராஜன் மகன் விக்னேஷ் (27). இவர் நேற்று முன்தினம் விவசாய நிலத்தில் டிராக்டர் மூலம் உழவு ஓட்டிவிட்டு வீட்டிற்கு வந்து நின்று கொண்டு இருந்தார். அப்போது அங்கு வந்த விஜயங்குப்பம் கிராமத்தை சேர்ந்த மகாலிங்கம் மகன் பிரசாந்த் மற்றும் அவருடன் ஆட்டோவில் வந்த 4 பேர் அசிங்கமாக திட்டி கத்தியால் சரமாரியாக வெட்டி உள்ளனர்.

இதில் படுகாயம் அடைந்த விக்னேஷ் விழுப்புரம் முண்டியம்பாக்கம் அரசு மருத்தவமனையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகிறார்.

இந்த சம்பவம் குறித்து திருநாவலூர் காவல் நிலையத்தில் விக்னேஷ் கொடுத்த புகாரின் பேரில் இன்ஸ்பெக்டர் அசோகன் 5 பேர் மீதும் வழக்கு பதிந்து தேடி வருகிறார்.

பருவமழையை எதிர்கொள்ள தயார் நிலையில் மீட்பு பணிகள் குழு

தீயணைப்பு துறை இயக்குனர் பேட்டி

▶ மரக்காணத்தில் வடகிழக்கு பருவ மழையை எதிர்கொள்ள மீட்பு பணிகள் துறை சார்பில் செய்யப்பட்டுள்ள முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மாநில தீயணைப்பு, மீட்பு பணிகள் துறை இயக்குனர் ரவி ஆய்வு செய்தார்.

மரக்காணம், நவ.3: வடகிழக்கு பருவ மழையை எதிர்கொள்ள மீட்பு பணிகள் குழுவினர் தயார் நிலையில் உள்ளதாக மாநில தீயணைப்பு, மீட்பு பணிகள் துறை இயக்குனர் கூறினார்.

தமிழகத்தில் கடந்த சிலநாட்களாக பருவமழை கொட்டி தீர்த்து வருகிறது. இந்நிலையில் விழுப்புரம் மாவட்டத்தில் கடற்கரையோரம் அமைந்துள்ள மரக்காணம் பகுதியில் பருவ மழையால் ஏற்படும் சேதங்களை தடுக்க தமிழக அரசு சார்பில் அனைத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருகின்றனர்.

இந்நிலையில் மாநில தீயணைப்பு மற்றும் மீட்பு பணிகள் துறை இயக்குனர் ரவி, மரக்காணம் பகுதியில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள மீட்பு பணிகள் குறித்த விவரங்களை நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

தொடர்ந்து இயக்குனர் ரவி கூறுகையில், தமிழகத்தில் வடகிழக்கு பருவமழையால் ஏற்படும் சேதங்களை தடுக்க முதல்வர் மு.க.ஸ்டாலின் உத்தரவின் பேரில் தீயணைப்பு மற்றும் மீட்பு பணிகள் துறை சார்பில் கடலோர மாவட்டங்களில் அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளது. இதேபோல் மரக்காணம் பகுதியிலும் பருவ மழையை எதிர்கொள்ள மீட்பு பணிகள் குழுவினர் தயார் நிலையில் உள்ளனர். தொடர்ந்து கடலூர் உள்ளிட்ட கடலோர மாவட்டங்களில் ஆய்வு செய்ய உள்ளேன் என்றார். அப்போது தீயணைப்புத் துறை, மீட்பு பணிகள் துறை அதிகாரிகள், வீரர்கள் உடனிருந்தனர்

தனியார் பள்ளி கலவர வழக்கு

மேலும் ஒருவர் குண்டர் சட்டத்தில் கைது

கள்ளக்குறிச்சி, நவ.3: கள்ளக்குறிச்சி மாவட்டம் சின்னசேலம் அருகில் உள்ள கனியாமூர் தனியார் பள்ளியில் கடந்த ஜூலை மாதம் 13 ம்தேதி அந்த பள்ளியின் விடுதியில் தங்கி படித்த மாணவி ஸ்ரீமதி மர்மமான முறையில் உயிரிழந்தார். இதனையடுத்து ஜூலை 17 ம்தேதி அந்த மாணவிக்கு நீதிகேட்டு சில அமைப்பினர் போராடியபோது கலவரமாக மாறியது. அப்போது போலீஸ் வாகனம் மற்றும் பள்ளி பேருந்துகள் உடைத்து சேதப்படுத்தி தீவைத்து எரிக்கப்பட்டன. மேலும் பள்ளி மாணவர்களின் சான்று, அலுவலக ரெக்கார்டு தீவைத்து எரிக்கப்பட்டன. மேலும் போலீசார் மீதுகற்களை வீசினர். இந்த கலவர வழக்கில் ஈடுபட்டவர்கள் மீது சின்னசேலம் போலீசார் வழக்கு பதிவு செய்தனர். அதில் சின்னசேலம் போலீசார் மற்றும் சிறப்பு புலனாய்வு குழு போலீசார் இதுவரை 500க்கும் மேற்பட்ட நபர்களை கைது செய்து சிறையில் அடைத்துள்ளனர். அதில் சிறுவர் மற்றும் பள்ளி மாணவர்கள் ஜாமீனில் வெளியில் வந்துள்ளனர்.

இந்நிலையில் சின்னசேலம் அடுத்த எலியத்தூர் கிராமத்தை சேர்ந்த துருப்புகாரண் மகன் ராஜீவ்காந்தி (41) என்பவர் காவல்துறை மீதுகற்களை வீசி தாக்கியதாக வழக்கு பதிவு செய்து கைது செய்து ஏற்கனவே சிறையில் அடைக்கப்பட்டுள்ளபார். இவர் வெளியில் வந்தால் இது போன்றே பல சட்டவிரோத செயல்களில் ஈடுபடுவார் என்பதால் ராஜீவ் காந்தியை ஒராண்டு குண்டர் தடுப்பு சட்டத்தின் கீழ் சிறையில் அடைக்க வேண்டி கள்ளக்குறிச்சி எஸ்பி பகலவன் பரிந்துரையின் பேரில் ராஜீவ்காந்தியை ஒராண்டு குண்டர் தடுப்புசட்டத்தின் கீழ் சிறையில் அடைக்க வேண்டி கள்ளக்குறிச்சி மாவட்ட ஆட்சியர் ஷ்ரவன்குமார் அதிரடியாக உத்தரவிட்டார். அதன்படி ராஜீவ் காந்தியை சின்னசேலம் போலீசார் கடலூர் மத்திய சிறையில் அடைத்தனர்.

▶ ராஜீவ்காந்தி

பள்ளி கலவர வழக்கில் இதுவரை மொத்தம் 13 பேர் குண்டர் தடுப்பு சட்டத்தின் கீழ் சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

காணவில்லை

அஞ்சலை, க/பெ.தனசேகர், மெயின் ரோடு, காந்தி நகர், பாதூர் (PO), உளுந்தூர்பேட்டை தாலுக்கா என்ற முகவரியில் வசிக்கும் நான் என்னுடைய பத்திரம் (ஆவண எண்: 2554/2010) உளுந்தூர்பேட்டை கடைவீதியில் ஜெராக்ஸ் எடுக்க சென்ற போது தொலைந்துவிட்டது. பத்திரத்தை கண்டெடுப்பவர்கள் மேற்கண்ட முகவரியில் தகவல் தெரிவிக்கவும்.

அஞ்சலை, செல்: 98332 29953

வடகிழக்கு பருவமழையை கண்காணிக்க

ஒவ்வொரு தாலுகாவுக்கும் கண்காணிப்பு அலுவலர்கள்

▶ விழுப்புரம் திரு.வி.க. சாலையில் மழைநீர் வடிகால் பணியை ஆட்சியர் மோகன் பார்வையிட்டு ஆய்வு செய்தார். அருகில் நகராட்சி ஆணையர் சுரேந்திரஷா.

விழுப்புரம், நவ.3: விழுப்புரம் மாவட்டத்தில் வடகிழக்கு பருவமழையை கண்காணித்திட அனைத்து தாலுகாக்களுக்கும் துணை ஆட்சியர் நிலையில் கண்காணிப்பு அலுவலர்கள் நியமிக்கப்பட்டுள்ளதாக ஆட்சியர் மோகன் கூறினார்.

வடகிழக்கு பருவமழையொட்டி விழுப்புரம் நகராட்சிக்குட்பட்ட திரு.வி.க தெரு, சிலப்பதிகார தெரு, மருதூர், அனிச்சம் பாளையம், தளவானூர் ஆகிய இடங்களை நேற்று ஆட்சியர் மோகன் ஆய்வு செய்து அங்கு மேற்கொள்ளப்பட்டு வரும் மழைநீர் வடிகால்வாய் பணிகளை விரைந்து முடித்திட அலுவலர்களுக்கு உத்தரவிட்டார். அப்போது ஆட்சியர் கூறியதாவது:

மாவட்டம் முழுவதும் 1177 கட்டிடங்கள் நிவாரண முகாம்களாக தேர்வு செய்யப்பட்டுள்ளது. இதனை தவிர்த்து கடலோர பகுதிகளில் 19 கிராமங்களில் 25,000 நபர்கள் வசிக்கின்ற நிலையில் மரக்காணம் வட்டத்தில் 10 நிவாரண முகாம்களும், வானூர் வட்டத்தில் 3 நிவாரண முகாம்கள் என 10,000 நபர்கள் தங்க வைத்திடும் வகையில் 13 நிவாரண முகாம்களும் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளது.

வடகிழக்கு பருவமழையை கண்காணித்திட அனைத்து தாலுகாக்களுக்கும் துணை ஆட்சியர் நிலையில் கண்காணிப்பு அலுவலர்களும், 53 குழுக்களும் நியமிக்கப்பட்டு முன்னெச்சரிக்கை நடவடிக்கை பணிகளில் ஈடுபட்டு வருகின்றனர். மழைநீர் தேங்கக்கூடிய பகுதிகளாகவும், தாழ்வான பகுதிகளாகவும் கண்டறியப்பட்ட இடங்களில் தொடர்ந்து கண்காணிப்பு பணியில் ஈடுபட 4,500 முதல்நிலை பொறுப்பாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

விழுப்புரம் நகராட்சிக்குட்பட்ட திருச்சி பிரதான சாலை பிள்ளையார் கோயில் அருகில் கழிவுநீர் ஓடையை சுத்தம் செய்யும் பணியினையும், திரு.வி.க சாலை குடியிருப்பு, நகர காவல் நிலைய பகுதி, காவலர் குடியிருப்பு பகுதிகளில் மழைநீர் செல்வதற்கான வடிகால்வாய் பணிகளையும், வி.மருதூர் பெருமாள் நகர் பகுதியில் குடிநீர் குழாய் சேதமடைந்து, குடிநீர் வீணாகாமல் உடனடியாக சரிசெய்து சுத்தமான குடிநீர் வழங்க வேண்டும் என்றும் அலுவலர்களுக்கு அறிவுறுத்தியதோடு, அப்பகுதி கழிவுநீர் கால்வாய் தூர்வாரும் பணியினையும், அனிச்சம்பாளையம் சாலை அண்ணா நகர் கழிவுநீர் கால்வாய் தூர்வாரும் பணியினையும் மற்றும் வ.உ.சி தெருவில் கழிவுநீர் கால்வாய் தூர்வாரும் பணியினையும் பார்வையிட்டு ஆய்வு செய்யப்பட்டது.

விழுப்புரம் மாவட்டத்தில் வடகிழக்கு பருவமழையால் எவ்வித பாதிப்பும் ஏற்படாமல் இருப்பதற்காக அனைத்து முன்னேற்பாடு பணிகளும் மாவட்ட நிர்வாகத்தால் மேற்கொள்ளப்பட்டுள்ளது என்றார். அப்போது நெடுஞ்சாலைத்துறை கோட்ட பொறியாளர் சிவசேனா, பொதுப்பணித்துறை செயற்பொறியாளர் ஷோபனா, விழுப்புரம் வருவாய் கோட்டாட்சியர் ரவிச்சந்திரன், நகராட்சி ஆனந்தகுமார் உள்ளிட்ட ஆணையர் சுரேந்திரஷா, அதிகாரிகள் உடனிருந்தனர்.

ஆட்சியர் மோகன் உத்தரவு

ஆற்றுப்பகுதிகளுக்கு குழந்தைகளை அனுப்பக்கூடாது

ஆட்சியர் மோகன் கூறுகையில், நகர பகுதிகளில் உள்ள கழிவுநீர் கால்வாய்களில் டீகப், பிளாஸ்டிக் பாட்டில் போன்ற பொருட்களை போடக்கூடாது என்று அறிவுத்தப்பட்டுள்ளது. மழைக்காலம் என்பதால் பொது மக்கள் கூடுதல் கவனமாக இருக்க வேண்டும். மழைநீர் வடிகால் ஓடை கரை ஓரமாக குடியிருப்பில் வசிக்கும் மக்கள் மிக கவனமாக இருக்க வேண்டும். ஓடையில் மழைநீர் வரத்து அதிகமாகும் பட்சத்தில் அருகில் உள்ள நிவாரண முகாமிற்கு சென்று தங்கிக் கொள்ள வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. தொடர்ந்து தளவானூர் அணைக்கட்டு சீரமைக்கும் பணியினை நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்யப்பட்டது. கடந்த மழை வெள்ளத்தில் பாலம் சேதமடைந்தது. எனவே தற்போது மழைக்காலம் என்பதால் ஆற்று தண்ணீர் கரை ஓரங்களில் செல்லாமல் ஆற்றின் நடுப்பகுதியில் செல்லும்படியாகவும் கரை ஓரம் அரிப்பு ஏற்படாமல் பாதுகாத்திடும் வகையிலும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. பொதுப்பணித்துறை நீர்வள ஆதார அமைப்பு துறை மற்றும் ஊரக வளர்ச்சி துறைகளில் மணல் மூட்டைகள், சவுக்கு கட்டைகள் மற்றும் கருங்கற்கள் தயார்நிலையில் வைக்கப்பட்டுள்ளன. பேரிடர் காலங்களில் அவசரகால தேவைக்கு பயன்படுத்தும் விதமாக 3000 உபகரணங்கள் தயார்நிலையில் வைக்கப்பட்டுள்ளன. இந்திய வானிலை ஆய்வு மையம் கனமழை அறிவிப்பு வெளியிட்டுள்ளதால் கடலோர பகுதிகளில் வசித்து வரும் மக்கள் பாதுகாப்பாக இருப்பதோடு, மீனவர்கள் கடலுக்கு செல்ல வேண்டாம் என அறிவுறுத்தப்படுதிறது. மேலும் பொதுமக்கள் ஆற்றில் இறங்கவோ குளிக்கவோ கூடாது. குழந்தைகளை ஆற்று பகுதிகளுக்கு செல்ல விடமால் பெற்றோர்கள் கவனமாக பார்த்துக் கொள்ள வேண்டும் என்றார்.

பைக்கிலிருந்து கீழே விழுந்த பெண் பலி

சங்கராபுரம், நவ.3: சங்கராபுரம் அடுத்த மூக்கனூர் கிராமத்தைச் சேர்ந்த சின்னப்பையன் மனைவி சாரதாம்பாள் (65). இவருக்கு உடல் நிலை சரியில்லாததால் கடந்த மாதம் 26ம் தேதி இருசக்கர வாகனத்தில் சங்கராபுரம் அரசு மருத்துவமனைக்கு அழைத்து செல்ல இருந்த நிலையில் மோட்டார் சைக்கிளில் ஏறும்போதே கீழே தவறி விழுந்தார். தலையில் லேசான காயமடைந்த அவரை சேலம் அரசு மருத்துவமனையில் சேர்த்தனர். அங்கு அவர் சிகிச்சை பலனின்றி இறந்தார். இதுகுறித்து அவரது மகன் கண்ணன் கொடுத்த புகாரின் பேரில் சங்கராபுரம் போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

ICICI Home Finance | கார்பரேட் அலுவலகம்: ஐசிஐசிஐ வீட்டுவசதி நிதி நிறுவனம் லிமிடெட், ஐசிஐசிஐ எச்எஃப்சி டவர், அந்தேரி-குர்லா சாலை, அந்தேரி (கிழக்கு), மும்பை-400059, இந்தியா

கிளை அலுவலகம்: 2வது தளம், சௌபர்ணிகா பிளாசா, ஓமலூர் பிரதான சாலை, சேலம்-6360091

[விதி 8(6) விதிமுறையை காண்க]

அசையாச் சொத்துகள் விற்பனை அறிவிப்பு

கடனீட்டுச் சொத்து உரிமை (அமலாக்கம்) விதிகள், 2002 இன் விதி 8(6) விதிமுறையுடன் பத்திரமயமாக்கல் மற்றும் நிதிச் சொத்துகளை மறுசீரமைத்தல் மேலும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கம் சட்டம், 2002 கீழ் அசையாச் சொத்துகள் விற்பனைக்கான மின்-ஏலம் விற்பனை அறிவிப்பு.

இதன்மூலம் பொதுமக்களுக்கு பொதுவாக மேலும் கடன்தாரர்(கள்) மற்றும் ஜாமீன்தாரர்(கள்) ஆகியோருக்கு குறிப்பிட்டு வழங்கப்படும் அறிவிப்பாவது கடனீட்டு கடனீந்தோரிடம் அடமானம் வைக்கப்பட்ட/உரிமை அளிக்கப்பட்ட, ஐசிஐசிஐ வீட்டுவசதி நிதி நிறுவனம் லிமிடெட்டின் அதிகாரப்பூர்வ அதிகாரியால் **அடையாளப்பூர்வ சுவாதீனம்** செய்யப்பட்டிருக்கும் கீழே விவரிக்கப்பட்ட அசையாச் சொத்தானது இதன்கீழ் கொடுக்கப்பட்ட குறு விவரங்களின்படி "உள்ளது உள்ளவிடத்தில்", "உள்ளது உள்ளவாறு", மேலும் "உள்ளது எதுவோ அது" அடிப்படையில் விற்பனை செய்யப்படவுள்ளது.

வ. எண்	கடன்தாரர்(கள்)/ உப கடன்தாரர்கள்/ ஜாமீன்தாரர்கள்/ சட்டப்பூர்வ வாரிசுகள் பெயர். கடன் கணக்கு எண்	தெரிந்த வில்லங்கங்கள் ஏதேனுமிருந்தால் அவற்றுடன் கூடிய கடனீட்டுச் சொத்து(கள்) விவரங்கள்	நிலுவைத் தொகை	நிர்ணய விலை / முன்வைப்புத் தொகை	சொத்து பார்வையிடும் நாள் மற்றும் நேரம்	ஏலம் நாள் & நேரம்
(அ)	(ஆ)	(இ)	(ஈ)	(உ)	(ஊ)	(எ)
1.	S சுந்தரவதனம் (கடன்தாரர்) கடன் கணக்கு எண் NHKLK00000825647	ச. எண் 165/17A, பட்டா எண் 179, பகங்காயமங்கலம் சாலை, பத்மா நகர், கே. மாமணந்தாள், தியணைப்பு நிலையம் பின்புறம், கள்ளக்குறிச்சி-606202.	Rs.31,28,572/- 1st Nov, 2022	Rs. 23,43,750/- / Rs. 2,34,375/-	15th Nov, 2022 11:00 AM- 03:00 PM	18th Nov, 2022 2:00 PM- 3:00 PM

இயங்குதள ஏலம் எங்கள் ஏல முகமை ஆக்சன் டைகர் இணையதளத்தில் (URL இணைப்பு- https://sarfaesi.auctiontiger.net/EPROC/) நடத்தப்படும். அடமானதாரர்கள்/அறிவிக்கப்படுவோர் 17 நவம்பர், 2022 மாலை 05.00 மணிக்கு முன்பு வரை மொத்த நிலுவைகளை மேற்கொண்டு வட்டியுடன் செலுத்த ஒரு கடைசி வாய்ப்பு வழங்கப்படுகிறது இல்லையெனில் இந்த கடனீட்டுச் சொத்துகள் மேற்கூறிய அட்டவணைப்படி விற்பனை செய்யப்படும்.

எதிர்நோக்கும் ஏலதாரர்(கள்) **ஐசிஐசிஐ வீட்டுவசதி நிதி நிறுவனம் லிமிடெட், 2வது தளம், சௌபர்ணிகா பிளாசா, ஓமலூர் பிரதான சாலை, சேலம்-636009** இடத்தில் **17 நவம்பர், 2022 மாலை 04.00 மணி** அல்லது அதற்கு முன்பு முன்வைப்புத்தொகை (EMD) RTGS/ கேட்பு வரைவோலை (DD) (நிரல் உ காண்க) சமர்ப்பிக்கலாம். எதிர்நோக்கும் ஏலதாரர்(கள்) மேற்குறிப்பிட்ட காலத்தின்படி தங்கள் ஒப்பந்தப்புள்ளியை சமர்ப்பிக்க இயலவில்லை எனில் ஒப்பந்தப்புள்ளி ஆவணங்களின் கையொப்பமிட்ட பிரதியானது **ஐசிஐசிஐ வீட்டுவசதி நிதி நிறுவனம் லிமிடெட், 2வது தளம், சௌபர்ணிகா பிளாசா, ஓமலூர் பிரதான சாலை, சேலம்-636009** இடத்தில் **17 நவம்பர், 2022 மாலை 05.00 மணி** அல்லது அதற்கு முன்பு சமர்ப்பிக்கப்படலாம் என்பதை கவனத்தில் கொள்ளவும். முன்வைப்புத்தொகை கேட்பு வரைவோலை (DD) ஒரு தேசியமயமாக்கப்பட்ட/ அட்டவணையிடப்பட்ட வங்கியிலிருந்து **கள்ளக்குறிச்சியில்** மாற்றத்தக்க வகையில் **"ஐசிஐசிஐ வீட்டுவசதி நிதி நிறுவனம் லிமிடெட்-ஏலம்"** என்ற பெயரில் பெறப்பட வேண்டும்.

சொத்து பார்வையிடுதல், ஏல விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் அல்லது ஒப்பந்தப்புள்ளிகள் சமர்ப்பித்தல் குறித்த அனைத்து மேற்கொண்டு சந்தேகதீர்வுகளுக்கு, **ஐசிஐசிஐ வீட்டுவசதி நிதி நிறுவனம் லிமிடெட் 7021072869** இல் தொடர்பு கொள்ளவும்.

அதிகாரப்பூர்வ அதிகாரி எந்த மேற்கொண்டு காரணங்களையும் தெரிவிக்காமல் ஏதேனும் அல்லது அனைத்து ஏலப்புள்ளிகளையும் நிராகரிக்க உரிமை கொண்டுள்ளார்.

விரிவான விற்பனை விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு, காண்க https://www.icicihfc.com/

நாள் : நவம்பர் 03, 2022
இடம் : கள்ளக்குறிச்சி

அதிகாரப்பூர்வ அதிகாரி
ஐசிஐசிஐ வீட்டுவசதி நிதி நிறுவனம் லிமிடெட்